# 16 சுவாமி விபுலானந்தர்



ஈழத்துத் தமிழ்ப் பெரியார்களுள் சுவாமி விபுலானந்தரும் ஒருவர். 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி கிழக்கு மாகாணத்தில் உள்ள காரைதீவு என்னும் கிராமத்தில் பிறந்தவர். சாமித்தம்பி - கண்ணம்மையின் அன்புப் புதல்வன். மயில்வாகனம் என்ற இளமைப் பெயரைக் கொண்டவர். இளமைக் கல்வியை உயர் திரு.க.குஞ்சித்தம்பி, புலோலி பொ.வைத்தியலிங்கதேசிகர் ஆகிய உபாத்தியாயர்களிடம் கற்றவர். கல்முனை மெதடிஸ்தஆங்கிலப் பாடசாலை, மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி ஆகியவற்றிலும் கல்வி கற்ற பெருமைக்குரியவர்.

பாடசாலைக் கல்வியைக் கற்றுக் கொண்டிருக்கையில் கேம்பிரிஜ் ஜூனியர், கேம்பிரிஜ் சீனியர், கொழும்பு ஆசிரிய கலா சாலைகளில் விஞ்ஞான ஆசிரிய டிப்ளோமா, 1916 இல் மதுரைத் தமிழ் சங்கப் பண்டிதர், 1920 இல் லண்டன் விஞ்ஞானப் பட்டம் ஆகிய பரீட்சைகளில் தேறியவர். தமிழ், ஆங்கிலம், வடமொழி, கிரேக்கம் ஆகிய மொழிகளிலும் புலமை மிக்கவர். கல்முனை கத்தோலிக்க மிசன் பாடசாலை, மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி, யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றியவர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி, திருகோணமலை இந்துக்கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அதிபராகவும் கடமையாற்றியவர். இவ்வாறான புலமை மிக்க இவரது எண்ணம் துறவு வாழ்க்கையையே பெரிதும் நாடியது. இதனால் 1922 இல் சென்னை மயிலாப்பூர் இராம கிருஷ்ண மடத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டார். சுவாமி சிவானந்தர் என்பவரால் ‘பிரபோத’ ‘சைதன்யர்’ என்ற பிரம்மச்சரிய நாமத்தைப் பெற்றுக்கொண்டார். 1924 இல் ஞான உபதேசம் பெற்று சுவாமி விபுலானந்தர் என்னும் தீட்சாநாமம் பெற்றார். இவ்வாறு பெருமைக்குரிய இப்பெரியார் சமயம், கல்வி, கலை, இலக்கியம் சமூகம் என்பவற்றின் வளர்ச்சிக்காகத் தன் வாழ்நாளைத் தியாகம் செய்தார். ஆதலால் இவரது ஒவ்வொரு பணிகள் பற்றித் தனித்தனியாகக் கற்போம்.

## 1. சமயப்பணிகள்

சுவாமி விபுலானந்தர் அவர்களின் சமயப் பணிகள் பலதரப்பட்டன. சமய நூல்கள் எழுதி வெளியிடல், சமயப்பிரசங்கம் செய்தல், சமய மாநாடுகள், கருத்தரங்கு என்பவற்றுக்குத் தலைமை தாங்குதல், வேதாந்த மரபு சார்ந்த கவிதைகள் எழுதி வெளியிடல், சமயப் பெரியோர்களை மதித்துப் போற்றியதுடன் அவர்கள் போதனைகளையும் பணிகளையும் முன்மாதிரியாகக் கொண்டு வாழ்ந்தமை என்பவற்றைக் குறிப்பிடலாம். கணேச தோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கப் பிள்ளை இரட்டை மணிமாலை, சுப்பிரமணிய சுவாமிகள் இரட்டை மணிமாலை, உமா மகேஸ்வரன் கணேச தோத்திர பஞ்சகம், நடராச வடிவம், குமாரவேல் நவமணிமாலை, கலிப்பா, வஞ்சிப்பா, விருத்தப்பா வகைகளையும் கண்ணிகள் சிந்துகளையும் கையாண்டு நான்மணி மாலை, தோத்திரம், என்ற சமய நூல்களை எழுதியவர். இலங்கையில் அத்வைத வேதாந்த மரபின் முன்னோடியாக விளங்கியதுடன் இத்தத்துவங்களை பாமர மக்களும் விளங்கும் வண்ணம் போதித்தவர். இராமகிருஷ்ண சங்கத்தின் கிளைத்தாபனம் ஒன்றை இலங்கையில் நிறுவி அதன் ஆதரவில் கல்விச் சாலைகள் பல அமைத்தும் மாணவர் இல்லங்களை அமைத்தும், திருமடங்களைக் கட்டியும் தருமபரிபாலனம் செய்தவர். இவ்வாறு அவரது சமயப்பணிகள் பலவற்றைக் கூறலாம்.

## 2. இலக்கியம்

சுவாமி விபுலானந்தரின் இலக்கியப் பணிகள் பதிப்பாசிரியர், உரையாசிரியர் என்ற வகையில் அடக்கப்படுகின்றன. தமிழரின் பழம் பெருமைகளையும் பத்திரிகைகளான செந்தமிழ்ச் செல்வி, கலைமகள், ஈழகேசரி போன்றவற்றில் எழுதி வெளியிட்டார். வேதாந்த கேசரி, இராமகிருஷ்ண விஜயம், பிரபுத்த பாரத முதலான வெளியீடுகளுக்கு பத்திரிகையாசிரியராக விளங்கினார். தெளிவான நடை, எளிமை என்பவற்றைக் கையாண்டதுடன் ஓசை நயம், உணர்ச்சி வெளியீட்டுச் சிறப்பாலும் தம் உரைநடையிற் கூட பல இடங்களில் கவிதையின் எல்லையைத் தொட்டவர். இவரது உரைநடை நூல்கள் என்ற வகையில் விஞ்ஞான கட்டுரை, கலைச் சொற்கள், விஞ்ஞான தீபம், மொழிபெயர்ப்பு என்ற வகைகளில் காணப்பட்டன. இவற்றிற்கு உதாரணமாக சுவாமி விபுலானந்தர் சம்பாஷணை, விவேகானந்த தீபம், விவேகானந்தரின் சொற் பொழிவு நூல்கள் என்பவற்றைக் கூறலாம்.

## 3. கல்வி

சுவாமி விபுலானந்தர் கல்வியில் உயர்ந்து விளங்கியதுபோல் இந்துக்களும் அத்தகைய கல்வி பெற வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர். தமிழ் மாணவர்களுக்கு உயர் கல்வியை வழங்கும் பொருட்டு சிதம்பரத்தில் பல்கலைக்கழகம் நிறுவுவதை வலியுறுத்தி சென்னை மாகாண அரசின் கல்விக் குழுவுக்கு சிபாரிசு செய்ததுடன் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உதயமாவதற்கும் வித்திட்டவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இலங்கைப் பல்கலைக்கழகம் என்பவற்றில் முதல் தமிழ்ப் பேராசிரியராக பணியாற்றியவர். மேல்நாட்டுக்

கல்வியை இந்துக்கல்வி மரபிற்கு கொண்டு வந்தவர். 'கற்ற கல்வி பிறரைப் பாதிக்கக் கூடாது. அது உயிர்ப்பூட்டுவது. உண்மையைக் காட்டுவது. தன்னம்பிக்கையைத் தருவது' என்ற கொள்கையைக் கொண்டவர். இராம கிருஷ்ணமிசனுக்குரிய கல்விச்சட்டத்தை இந்துபோட் இராசரத்தினத்துடன் இணைந்து உருவாக்கியவர். 1925 இல் இராமகிருஷ்ணமிசன் பாடசாலைகளின் முகாமைப் பொறுப்பை ஏற்று நடத்தியவர். இராமகிருஷ்ணமிசனுடன் இணைந்து கல்லடி சிவானந்த ஆண்கள் பாடசாலை, ஆனைப்பந்தி இராமகிருஷ்ணமிசன் பெண்கள் பாடசாலை காரைதீவு சாரதா வித்தியாலயம், திருமலை இந்துக்கல்லூரி, வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை நிறுவி ஏழை மாணவர்களின் வாழ்வில் ஒளியூட்டியவர். மாணவர் நலன் கருதி 'கலைச் சொல் அகராதி'யை உருவாக்கியவர். யாழ்ப்பாணம், கல்லடி உப்போடையில் அநாதை ஆச்சிரமங்களை நிறுவி அநாதைச் சிறுவர்களின் கல்வியை மேம்படுத்தியவர். பாடசாலையில் வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனை நடத்துதல், பக்திப் பாசுரங்களை பாராயணம் செய்தல், பண்ணிசைப் பயிற்சிகளை நடத்துதல் போன்றவற்றிற்கு வழிகோலியவர். இவ்வாறு இவரது பணிகள் காணப்பட்டன.

## 4. கலையும் சமூகமும்

சுவாமி விபுலானந்தர் மேற்கூறப்பட்ட பணிகளுடன் கலை, சமூகப் பணிகளையும் செய்த பெருமைக்குரியவர். கலைப்பணிகள் என்ற வகையில் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். இசைத் தமிழிலே மிகுந்த ஈடுபாடும் ஆராய்ச்சியும் கொண்ட இவர் இயலின்றி இசையில்லை இசையின்றி இயலில்லை என்ற கொள்கைக்கிணங்க 'யாழ்நூல்' என்ற இசை நூலை இந்து உலகிற்கு அறிமுகப்படுத்தியவர். குருதேவர் வாக்கியம், விவேகானந்த பஞ்சகம், ஆறுமுகநாவலர், கங்கையில் விடுத்த ஓலை ஆகிய நூல்களை செந்தமிழ் நடையிலும் உள்ளத்தில் அனுபவித்த உணர்வுகளின் மூலமும் கவிதையில் எழுதியவர். மதங்க சூளாமணி என்ற நாடக நூலையும் எழுதியவர். இயல், இசை, நாடகம் என்பவற்றில் வல்லவர் என்பதால் 'முத்தமிழ் வித்தகர்' எனப் போற்றப்பட்டவர். இவ்வாறு அவரது கலைப்பணிகள் காணப்பட்டன. சமூகப் பணிகள் என்ற வகையில் மக்களை எப்போதும் நேசித்தவர். தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபட்டவர். அநாதை இல்லங்களின் வளர்ச்சிக்காக கிராமங்கள் தோறும் அறக் கொடைத் திட்டங்களை ஏற்படுத்தியவர். ஏழை மாணவர்கள், அநாதைக் குழந்தைகள் வாழ்வில் மிகுந்த அக்கறை காட்டியவர். இவ்வாறு அவரது சமூகப் பணிகள் காணப்பட்டன.

இவ்வாறு இலங்கைத் தமிழ் மக்கள் இந்து மக்கள் வாழ்விற்கு ஒளியூட்டிய தமிழ்ப் பெரியார் இவ்வுலக வாழ்விலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டார். இத்தகைய மகானுடைய சமாதி மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் இன்றும் இந்து மக்களுக்கு கலங்கரை விளக்காகத் திகழ்கின்றது.



**விபுலானந்தர் சமாதி**

## பயிற்சிகள்

1. சுவாமி விபுலானந்தர் எங்கே, எப்போது, பிறந்தார்?
2. சுவாமி விபுலானந்தரால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு சமயப் பணிகளை எழுதுக.
3. சுவாமி விபுலானந்தரால் எழுதப்பட்ட இசை நூலும் நாடக நூலும் யாவை?
4. சுவாமி விபுலானந்தரது சமூகப் பணிகள் இரண்டைப் பெயரிடுக.
5. சுவாமி விபுலானந்தரின் சமாதி எங்கே காணப்படுகின்றது?

## செயற்பாடு

★ 'முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர்' என்ற தலைப்பில் வகுப்பறையில் 5 நிமிடமளவில் பேச்சொன்றை நிகழ்த்திக் காட்டுக.

## பாடச்சுருக்கம்

★ ஈழத்துத் தமிழ்ப் பெரியார்களுள் விபுலானந்தரும் ஒருவர்

★ மயில்வாகனம் என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் துறவு வாழ்க்கையின் மூலம் பிரபோத சைத்தன்யர் பிரம்மச்சரிய நாமத்தையும், சுவாமி விபுலானந்தர் என்ற தீட்சா நாமத்தையும் பெற்றுக்கொண்டவர்.

★ கல்விப் புலமையால் ஆசிரியர், அதிபர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தலைவர் ஆகிய பதவிகளை வகித்தவர்.

★ இவர் பல சமயப் பணிகளையும் இலக்கியப் பணிகளையும் கல்விப் பணிகளையும் கலை சமூகப் பணிகளைனயும் செய்த பெருமைக்குரியவர்.

★ 'முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர்' என்ற பெருமையைப் பெற்ற தமிழ் அறிஞர்.

★ 1947 இல் இவ்வுலக வாழ்விலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட இவரது சமாதி மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் காணப்படுகின்றது.